Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 158

புதன்கிழமை 03 மே 2023

சித்திரை 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# யாழ். மாவட்டத்தில் மீண்டும் மலேரியா!

**யாழ்ப்பாணம், மே 3**

**யாழ்ப்பாணம், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் ஒருவருக்கு மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மலேரியாத் தொற்றுள்ள மேற்கு ஆபிரிக்க நாடொன்றுக்குச் சென்று வந்தவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.** »15

காணிகளை விடுவிக்குமாறு

## தையிட்டியில் இன்று கவனவீர்ப்புப் போர்!

யாழ்ப்பாணம், மே 3

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியிலும் அதைச்சூழவுள்ள பகுதிகளிலும் தனியார் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில், அந்தக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இன்றையதினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. »15

## எரிவாயுவின் விலை குறைகிறது இன்று

கொழும்பு, மே 3

லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை இன்று முதல் குறைக்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். »15

## மோசடிக்கார 'ஏஜென்ஸி': கடத்தப்பட்டு சித்திரவதை

3 பெண்கள் உள்ளிட்ட 11 பேர் பொலிஸாரால் கைது

வவுனியா, மே 3

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி பலரிடம் பணமோசடி செய்த முகவர் ஒருவரை »15

## 34 நாள்களேயான சிசுவொன்று சாவு!

பொன்னாலையில் துயரம்

யாழ்ப்பாணம், மே 3

பொன்னாலை மேற்குப் பகுதியில், பிறந்து 34 நாள்களேயான சிசுவொன்று நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளது. விதுஜன் கிஷான் என்ற ஆண் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது. குழந்தையின் மூக்கிலிருந்து குருதி வெளி »15

## விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்., மே 3

தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர »15

## வாய்க்காலில் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மே 3

இராமநாதபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி சந்தைப் பகுதியிலுள்ள வாய்க்காலுக்குள் »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மௌனம் கவலை தருகின்ற விடயம்!

## ஓமல்பே தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மே 3
உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பாக பௌத்த மகாநாயக்கர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கு அரசாங்கம் இன்னமும் பதில் அளிக்கவில்லை. இது கவலை தரும் விடயம்.

இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவில் இடம்பெற்றுள்ள அரசமைப்புக்கு முரணான சிலவிடயங்களை மாற்றவேண்டும் அல்லது புதிய சட்டவரைவை உருவாக்கவேண்டும் என பௌத்த மகாநாயக்கர்கள் உட்பட பலதரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த வேண்டுகோள்களுக்கும் இன்னமும் சரியான பதில் வழங்கப்படவில்லை. பௌத்தமத பீடாதிபதிகள் மாத்திரமின்றி சிவில் சமூகத்தினர் உட்பட பல தரப்பினர் இந்தச் சட்டவரைவு தொடர்பாகக் கவலை வெளியிட்டுள்ளனர். - என்றார். (எ-இ)

# 2048 இல் அபிவிருத்தியான நாடாக மாற்றுவதே இலக்கு!

## ஐ.தே.க. கட்டியம்

கொழும்பு, மே 3
2048 இல் இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதே எமது இலக்கு. எப்போதும் சவால்களை ஏற்றுக்கொண்டு வென்றெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் அந்த இலக்கை எட்டுவதற்கு திட்டம் வகுத்துள்ளனர்.

இவ்வாறு '2048 வெல்வோம்' என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மே தினக் கொண்டாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

சவால்களை எதிர்கொள்ளும் போது அதிகமான அரசியல் கட்சிகள் அவற்றில் இருந்து நழுவிவிடுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியே எப்போதும் சவால்களை ஏற்றுக்கொண்டு அவற்றை வென்றெடுத்துள்ளது.

2001 இல் நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் வீழ்ந்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நாட்டைப் பொறுப்பேற்றார் மூன்று மாதங்களில் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்து முன்னேற்றினார்.

2022ஆம் ஆண்டு வங்குரோத்தடைந்த அரசை பொருளாதாரம் முற்றிலும் சரிந்திருந்த நாட்டை அரசை சரியான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்லும் சவாலை ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார். 2048 இல் இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதே எமது இலக்காகும். - என்றார். (ச-22)

## தென்னிலங்கைப் பெரும்பான்மையினரின்

# மறைமுக நிகழ்ச்சிநிரலை அறியாது பூர்வீகக் காணிகளை விற்காதீர்கள்!

## சித்தார்த்தன் எம்.பி. வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மே 3**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் முதலில் மத ரீதியாக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்கள பௌத்தமயமாக்கலை நிறுத்தவேண்டும். வடக்கு, கிழக்கு மக்களிடம் தாழ்மையுடன் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றேன். தென்னிலங்கைச் சிங்கள இனத்தவரின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறியாது எங்களின் பூர்வீக நிலங்களை அவர்களுக்கு விற்காதீர்கள்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கந்தரோடையில் அமைக்கப்படும் பௌத்த விகாரை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விகாரை அமைக்கப்படும் காணி சுமார் இரு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவரால் இரகசியமாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. இந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கசினோ நடத்தி வருபவராவார். அவர் கொள்வனவு செய்த 8 பரப்புக் காணியைத் தற்போது பௌத்த துறவி ஒருவருக்கு வழங்கப்பட்டு, அங்கு விகாரை கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவது, இலங்கை ஒரு சிங்கள- பௌத்த நாடு என்பதை நிரூபிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை.

இந்தக் காணி விற்கப்பட்டபோதும் நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனால் அது தனியாருடைய காணி என்பதால் எம்மால் எதுவும் செய்ய முடியாதுபோனது. அங்கு விகாரை கட்டுப்படுமாக இருந்தால் அதை முழுமையாக எதிர்ப்போம். இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

விகாரை அனுமதியை வடக்கில் இருந்து வழங்குவோர் அதை வழங்கக்கூடாது. இது ஒரு சமய முரண்பாட்டை உருவாக்கி அமைதியற்ற நிலைமையைக் கட்டாயம் ஏற்படுத்தும். கடந்த ஆண்டு பங்குனி மாதம் இதற்காக அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச அடிக்கல் நட இருந்த நிலையில் மக்களின் எதிர்ப்புக் காரணமாகத் தடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முரண்பாடுகளை இனங்களிடையே சுமுகமாகப் பேசித் தீர்ப்போம் என்று தெரிவித்தாலும் இவ்வாறான பௌத்த மயமாக்கல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றே வருகின்றன. இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளோம்.


வடக்கு, கிழக்கு மக்களிடம் தாழ்மையுடன் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றேன். தென்னிலங்கைச் சிங்கள இனத்தவரின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறியாது எங்களின் பூர்வீக நிலங்களை அவர்களுக்கு விற்காதீர்கள் - என்றார். (எ-125)

# மதுப்பாவனையில் வீழ்ச்சி

கொழும்பு, மே 3
சட்டரீதியான மதுப் பாவனை குறைவடைந்தமை தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

பண்டிகைக் காலத்தில் சட்டவிரோத மது விற்பனையுடன் தொடர்புடைய 2 ஆயிரத்து 450 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத மதுப் பாவனையின் ஊடாக சட்டரீதியான மது விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும்- என்றார். (எ-இ)



# அளவுக்கதிக மதுப்போத்தலுடன் சிறுவன் கைது

யாழ்ப்பாணம், மே 3
சட்டவிரோதமான முறையில் அளவுக்கதிக மதுபான போத்தல்களை எடுத்துச் சென்ற ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். 17 வயதுடைய அனலை தீவைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 4 சீல் செய்யப்பட்ட மதுபானப் போத்தல்கள், 4 பியர் கேஸ் என்பன கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் சிறுவர் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

# விசேட மருத்துவ நிபுணர் பற்றாக்குறையால் சிக்கல்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3
விசேட மருத்துவ நிபுணர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக கிராமிய மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

60 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் கட்டாயமாக ஓய்வுபெற வேண்டுமென அரசாங்கம் கொண்டு வந்த தீர்மானமும் மருத்துவர்கள் வெளிநாடு செல்வதுமே இந்தப் பிரச்சினைக்குக்காரணம் என மேற்படி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிண்ணியா, மூதூர், அக்கரைப்பற்று, திருகோணமலை, கந்தளாய், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திஸ்ஸமகாராம, ஏறாவூர், சிலாபம், எம்பிலிபிட்டி, பதுளை, மகாஓயா, தியத்தலாவ, பதவியா, டிக்கோயா, நாவலப்பிட்டி, நிக்கரவெட்டி, மாத்தளை போன்ற பிரதேசங்களில் விசேட மருத்துவ நிபுணர்களுக்கு மட்டுமன்றி மருத்துவர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது, விசேட மருத்துவ நிபுணர்கள் விரும்பினால் ஓய்வுபெற்ற் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றலாம் என்று தெரிவித்துள்ளார்.

விசேட மருத்துவ நிபுணர்கள் பலர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதை விரும்பவில்லை.

அரசாங்கத்தின் 60 வயதுடன் கட்டாய ஓய்வு என்ற நடைமுறை மருத்துவத்துறையைப்பொறுத்த மட்டில் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியுள்ளது எனவும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் திட்டங்களில் ஏராளமான குறைபாடுகள்!

## சர்வதேச செய்தித்தளம் விமர்சனம்

**கொழும்பு, மே 3**

**இலங்கையின் நாடாளுமன்றம் எதிர்பார்க்கப்படும் பிணை எடுப்புத் தொடர்பாக விவாதித்துள்ளபோதும், நாட்டின் வளர்ச்சிக்கான நீண்டகாலத் தீர்வுகளில் குறைபாடுகள் உள்ளன என்று பிரபல சர்வ தேச செய்தித்தளம் ஒன்று விமர்சித்துள்ளது. நியூஸ் கானா என்ற செய்திச் சேவையே இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளது.**


இலங்கை 16 தடவைகள் சர்வ தேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களை செய்து கொண் டது என்று ஜனாதிபதி கூறுகி றார். எனினும் அவர் எதிர்கா லத்துக்கான பொருளாதாரக் கணிப்புகளில் ஒரு நேர்மறை யான சுழற்சியை முன்வைக்க முயற்சிக்கிறார் என்று நியூஸ் கானா குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் கருத்து, வளர்ந்து வரும் நாடுகள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் விதிக்கப்படும் தொடர்ச்சியான - கடுமையான நிபந்தனைகளைப் புறக்கணிக் கிறது.

சர்வதேச நாணய நிதியம் மற் றும் உலக வங்கியின் சமூக அழிவு தாக்கத்துக்கு ஐந்து தசாப்தங்களுக்கும் மேலான உதாரணங்கள் உள்ளன. இரண்டு நிறுவனங்களும் இரண்டாம் உலகப் போரின் முடிவில் எழுந்த பிரெட்டன் வூட்ஸ் பணவியல் அமைப்பின் துணைத் தயாரிப்புக்களாகும். 1930 ஆம் ஆண்டு மற்றும் 1940 ஆம் ஆண்டு காலப்பகு தியில் பாசிச எதிர்ப்புப் போர்க ளுக்குப் பிறகு ஐரோப்பாவின் பொருளாதார மற்றும் தொழில் துறை சீரமைப்புக்காக இந்த இரண்டு நிறுவனங்களும் வடி வமைக்கப்பட்டுள்ளன.

1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், இந்த இரண்டு நிறுவனங்களின் ஏகாதிபத்தி யத்தால் காலனித்துவத்துக்குப் பிந்தைய காலத்தில் உண்மை யான சுதந்திர அரசாங்கங்க ளின் தோற்றங்கள் ஒடுக்கப்பட் டன. எந்தவொரு புதிய தாராள வாத பொருளாதார மறுசீர மைப்புத் திட்டமும், அபிவிருத் தியடைந்து வரும் நாடுகளுடன் இணைந்து இலங்கையில் அதிகரித்துவரும் வறுமை மற் றும் வளர்ச்சியின்மை போன்ற பிரச்சினைகளை திறம்பட நிவர்த்தி செய்யமுடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் பொதியை ஏற்றுக்கொள்வ தற்கு இலங்கை நாடாளுமன் றத்தால் சட்டம் இயற்றப்பட்டா லும், இந்த அணுகுமுறை ஸ்திரத்தன்மையை நோக்கி ஒரு நிலையான பாதையை வழங்கமுடியாது. அதேநேரம் சமூகத் திட்டங்களுக்கு நிதியு தவி மற்றும் மக்களின் பொரு ளாதார வலுவூட்டலுக்கான மாற்று முன்மொழிவுகளைத் தவிர்க்க முடியாமல் அரசியல் மற்றும் வெகுஜனப் போராட்டங் களை இது ஏற்படுத்தும் என்று அந்தச் செய்திச் சேவை குறிப் பிட்டுள்ளது. (எ-இ)



# புத்தர் சிலையை உடைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, மே 3

முல்லைத்தீவு, கொக்கிளாய் முகத்துவாரத்தில் அமைந்துள்ள பௌத்த சிலை ஒன்றைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கொக்கி ளாய் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் முகத்துவாரம் பகுதியில் உள்ள ஒன்றரை அடி உயரமுடைய சிறிய புத்தர் சிலை சேதமாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள் ளப்பட்ட விசாரணையின் பின்னரே சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நீர்கொழும்பு, உடப்பு பகுதியைச் சேர்ந்த 33 வயது டையவர் என்றும், இவர் மீன்பிடித் தொழிலுக்காக முகத்துவாரம் பகுதியில் தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (எ-19)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 3

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட உரும்பிராய் கிழக்கு பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கோப்பாய் பொலிஸார் தெரி வித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக் குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் இந்தக் கைது இடம்பெற்றது. 24 வயதான இளைஞரே கைதுசெய்யப் பட்டுள்ளார் என்றும் சந்தேக நபரிடமிருந்து 2.5 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள் ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை யாழ்.நீதி வான் நீதிமன்றில் முற்ப டுத்தி மேலதிக விசாரணை களை கோப்பாய் பொலி ஸார் முன்னெடுத்துள்ள னர். (ச-125)

# நீதிமன்றின் மீது கல் வீச்சு; சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், மே 3

நீதிமன்ற வழக்குக்குச் செல்லா திருந்த தமிழ் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கோப்பாய் பொலிஸ் பிரிவில் வைத்துக் கைது செய்யப்பட் டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கு யாழ். நீதிமன்றில் நடை பெற்றவேளை, நீதிமன்றுக்குக் கல் எறிந்த சம்பவம் தொடர் பில் இந்தச் சிப்பாயின் பெயர் சந்தேகநபராகக் குறிப்பிடப்பட் டிருந்தது. இந்த வழக்குக்கு சந்தேகநபர் செல்லாத நிலை யில் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தற்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். 25 வய தான சந்தேகநபர் முல்லைத் தீவில் இராணுவத்தில் பணி யாற்றுகின்றார் என்று தெரிவிக் கப்பட்டது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வெ**ள்ளம் வரப்போகுதெண்டு முதலே தெரிஞ்சாலும் பெரிசாக் கணக்கில எடுக்காம விட்டிட்டு, வெள்ளம் வந்த பிறகுதான் எங்கட ஆக்கள் அணைகட்டுறதுக்கு மண்வெட்டி, பிக்கான், கடகம் எண்டு ஓடித்திரிவினம். அப்ப தானே புட்டுக்கு மண் சுமந்த பெருமான் மாதிரி, எல்லாருக்கும் தாங்கள் மட்டும் ஏதோ வெட்டிப் புடுங்கிறம் எண்டு படம் காட்டமுடியும். எல்லாம் பொன்னம்பலத்தாடுவான் வைகை ஆறு பெருக் கேடுக்கேக்க இந்த படம் காட்டுற ஸ்டைலை தொடக்கிவிட, இப்ப அதையே பொன்னம்பலத் தாரின்ர பேரனாரும் சிக்கெனப் பிடித்து, சிறப்பாச் செய்யிறார். அப்பிடி வெள்ளம் வந்த பிறகு அணைகட்டிற வேலையில ஒண்டுதான், இண்டைக்கு தையிட்டில நடக்கப்போற ஆர்ப் பாட்டம். பொது அமைப்பொண்டு செய்யிற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வழக்கமா தனித்தவில் வாசிக் கிற முன்னணியும் சேர்ந்து தாளம் போடுது.

அங்க ஒரு தனியாரின்ர காணிக்குள்ள ஆமிக் காரர் விகாரை கட்ட வெளிக்கிடுகினம் எண்டு எப்பவோ தகவல் வந்திட்டுது. அதைப்பற்றியெல் லாம் அபிவிருத்திக் குழுக்கூட்டங்களிலையும் எல்லாரும் கதைச்சு, விகாரை கட்டுறதை நிப் பாட்ட வேணும் எண்டெல்லாம் தீர்மானமும் கொண்டந்தவை. ஆனால் உந்தத் தீர்மானமெல் லாம் ஆமிக்காரரை என்னதான் செய்யும்? கண்டாமிருகத்தின்ர காலில கரப்பான்பூச்சி கடிச்சால் அதுக்கு நோகப்போகுதோ? நாங்கள் எங்கட பாட்டில தீர்மானங்களை மட்டும் கொண் டந்திட்டு மல்லாந்து குறட்டை விட்டுக்கொண் டிருக்க, அவங்கள் மளமளவெண்டு உந்தப் பஞ்சத்துக்கையும் விகாரையைக் கட்டிமுடிச்சு, கலசமும் வைச்சிட்டாங்கள். அதுக்குப் பிறகுதான் எங்கட ஆக்களுக்கு உலகம் வெளிச்சிருக்கு. அதுகும் பேஸ்புக், பேப்பர் எண்டு மீடியாக்களில் விகாரையைக் கட்டி, கலசமும் வைச்ச கதை வெளியில வந்தபிறகுதான், எங்கட ஆக்களுக்கு விஜயகாந்த் மாதிரி நரம்பெல்லாம் புடைச்சு, கண்ணெல்லாம் சிவந்து அப்பிடியே 'ரோசப் பழங்களாக' மாறி, இண்டைக்கு ஆர்ப்பாட்டமும் வைக்கப்போயினம்.

எங்கட நிலத்தில அடாத்தா விகாரையள் கட்டு றதை எதிர்க்கத்தான் வேணும். ஆனால் குருந் தூர்மலையில நீதிமன்றம் தடைபோட்டும் விகாரை கட்டினவங்கள், இஞ்ச தையிட்டில கட்டி முடிச்ச விகாரைக்கு எதிராப் போராடினால் இதை விட்டிட்டுப் போடுவாங்களோ? இல் லைத்தானே. எங்க போனாலும் தையிட்டி விகாரையை ஒண்டும் செய்ய ஏலாது. ஆனால் கந்தரோடையிலயும் கிட்டத்தட்ட தையிட்டிப் பிளானில ஒரு தனியார் காணிக்குள்ள புதிசா விகாரை வரப்போகுது. அப்பிடி கட்டுப்பட நினைக்கிற விகாரைக்கு எதிராப் போராடினாலாவது எதிர்ப்பை பார்த்து அதைக் கட்டுறதை தள்ளிப் போடலாமெல்லோ?



- பட்சி



# நீரேந்துப் பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி!

## கமநல திணைக்களம் மௌனம் என பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, மே 3

வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான குளத்து நீரேந்துப் பிரதேசம் முட்கம்பி வேலியிட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவோடு இரவாக குறித்த பகுதியில் கம்பிக்கட்டை போடப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டாணிச்சூர் புளியங்குளத்தின் குருமன்காட்டுக்கு அண்மித்த மன்னார் வீதி ஓரமாகவுள்ள நீரேந்துப் பிரதேசத்தை ஆக்கிரமித்து கம்பிக்கட்டை வேலி அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அந்தப் பகுதிக்கு அண்மையாகவுள்ள காணித் துண்டு ஒன்றை பெண்ணொருவர் வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் அகற்றியதுடன் சட்ட நடவடிக்கை எடுத்தனர்.

ஆனால் தற்போது குறித்த பகுதியில் கம்பிவேலி அமைக்கப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்ட போதும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனித்துள்ளனர். (ச-110)

# மண்ணுடன் டிப்பர்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மே 3

அனுமதிப்பத்திரமின்றி வெளிமாவட்டத்திலிருந்து ஊர்காவற்றுறை பிரதேசத்துக்குள் மண்ணுடன் நுழைய முற்பட்ட இரண்டு டிப்பர்கள் நேற்றுமுன் தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

மண்டைதீவில் குறித்த வாகனங்கள் இரண்டும் சோத னைக்கு உட்படுத்தப்பட்டபோது அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அவை கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட இரண்டு வாகனத்தின் சாரதிகளுக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-23)

# ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம்; பெரமுனவினருக்கு வாய்ப்பூட்டு

கொழும்பு, மே 3

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பகிரங்கமாக எதனையும் அறிவிக்கவேண்டாம் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் கட்சியின் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடத்துக்கு மேல் உள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பெரமுனவைச் சேர்ந்தவர்கள் கருத்து வெளியிடுவது சிக்கலாகவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதிவேட்பாளர் தொடர்பில் அக்கட்சியின் அமைச்சர்கள் பலர் அரசியல் மேடைகளில் கருத்துக்களை வெளியிட்டு வருவதுடன், கட்சிக்குள் அது தொடர்பில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இனிமேல் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- அடுத்த வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகியோர் அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




வாதம் புரிவதில் வல்லவர் நீங்கள். சூழலுக்கு ஏற்ப செயற்படுவதில் சமர்த்தரும்கூட. உங்கள் ராசிக்கு 12ஆம் ராசியில் சோபகிருது புத்தாண்டு பிறக்கிறது. எதிர்பார்த்திருந்த பணவரவு உண்டு. செலவுகளும் உண்டு. இழுபறி நிலைகள் மாறும்.

சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வீடு, மனை வாங்குவது விற்பதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறும். பூர்வீகச் சொத்தில் இருந்த வில்லங்கம் விலகும். தோற்றப் பொலிவும் கம்பீரமும் கூடும்.

14.4.2023 முதல் 21.4.2023 வரை குருபகவான் 2ஆவது வீட்டிலேயே தொடர்வதால் குடும்பத்தில் அமைதி நிலவும். விலையுயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வழக்குகள் சாதகமாகும். 22.4.2023 முதல் வருடம் முடியும் வரை 3ஆம் வீட்டிற்குக் குரு செல்வதால், காரியத் தடைகள் அதிகரிக்கும். 14.4.2023 முதல் 25.8.2023 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை ஜன்மச்சனி தொடர்வதால் பெரிய நோய்கள் இருப்பதைப் போன்று எண்ணம் தோன்றும். ஆனால் எந்தப் பிரச்சினையும் இருக்காது. 26.8.23 முதல் 19.12.23 வரை விரயச் சனி நடைபெறுவதால், வீட்டில் வீண் சந்தேகங்கள், செலவுகள் உண்டாகும். ஆண்டின் தொடக்கம் முதல் 7.10.2023 வரை ராகு 3இல் நிற்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கேது 9இல் நிற்பதால் மருத்துச் செலவுகள் வந்த வண்ணம் இருக்கும். 8.10.2023 முதல் வருடம் முடியும் வரை ராகு 2 இல் நுழைவதால் பேச்சில் கடுகடுப்பு, பதற்றம் அதிகரிக்கும்.

ஆவணி மாதத்தில் கல்யாணம், சீமந்தம், புதுமனை புகுவிழா. காதணி விழா என வீட்டில் விசேஷங்கள் நடக்கும். வி.ஐ.பி.கள் நண்பராவார்கள். எதிலும் கவனம்.

30.5.2023 முதல் 3.7.2023 வரை மற்றும் 18.8.2023 முதல் 30.09.2023 வரை சுக்ரன் 6இல் மறைவதால், வாகனப் பயணத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் போட்டிகள் வேண்டாம்.

19.8.2023 முதல் 4.10.2023 வரை செவ்வாய் 8இல் மறைவதால், கட்டுக்கடங்காத செலவுகள் வந்து கொண்டேயிருக்கும்.

வியாபாரிகளே! தெளிவான முடிவெடுப்பீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும்.

உத்தியோகஸ்தர்களே! உழைப்புக்கு ஏற்ற பலன்கள் கிடைக்கும் காலம் இது. புது சலுகைகள், சம்பள உயர்வும் உண்டு. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். கணினி துறையினர் இழந்த சலுகையை மீண்டும் பெறுவார்கள்.

**மொத்தத்தில் இந்த சோபகிருது புத்தாண்டு, பண வரவையும் புதிய சகாப்தத்தைப் படைக்கும் வல்லமையையும் பெற்றுத் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமாக முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**தனுசு:** மகிழ்ச்சியான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்ப தில் அவசரம் வேண்டாம். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு சற்று கவலை தரும்.

**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வது ஆறுதல் தரும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

"வாழ்வு என்பது சில நொடியில் முடிந்துபோவதல்ல. ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் வாழ்வதாகும்!" – புத்தர்

## வார்த்தைகளை இனியும் நம்போம்!


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மே தின உரையில் வழக்கம்போன்று நாட்டின் இனப்பிரச்சினையையும் தொட்டுச் சென்றிருக்கின்றார். நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உடன்பாடு இந்த ஆண்டுக்குள் எட்டப்படும் என்று கூறியுள்ள அவர், தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்றும் அறிவுரை அள்ளி வழங்கியிருக்கின்றார். 'தீபாவளிக்குள் தீர்வு... 'புத்தாண்டுக்குள் தீர்வு', 'சுதந்திர தினத்துக்குள் தீர்வு' என்ற வாக்குறுதிக் கலாசாரத்தின் தொடர்ச்சியாகவே இப்போது இறுதியாக ரணிலும் 'இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு' என்பதாக திருவாய் மலர்ந்துள்ளார். தான் இனப்பிரச்சினைக்கான தீர்வில் பற்றுறுதியுடன் இருப்பதுபோன்றும், தமிழ்க் கட்சிகள்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுவதைத் தாமதித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது போன்றும் இருக்கின்றது ரணிலின் மே தின உரை.

நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடியால் அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதிப் பதவிக்கு வந்தபின்னர் ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை அவ்வப்போது பேசிக்கொண்டுதான் இருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான காலக்கேடுகளும் அதிகம். ஆனால், செயலளவில் எதுவும் நடந்ததாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ் மக்களுக்கு எதிரான நகர்வுகள் அதிகரித்துள்ளன என்றே கூறவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் இப்போதைய ஆட்சியில் அவரின் வாய்வார்த்தைகளுக்கு முற்றிலும் எதிரான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. இன நல்லிணக்கம் தொடர்பாகப் பேசும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழர் பகுதிகளில் நடக்கும் ஆக்கிரமிப்புக்கள், பௌத்தமயமாக்கல் தொடர்பில் கள்ள மௌனம் காக்கின்றார். அரச திணைக்களங்கள், படைத்தரப்புக்களின் ஆசீர்வாதத்தோடு தமிழ் மக்களின் புராதன வாழ்விடங்களும், வழிபாட்டிடங்களும் அடாத்தாகப் பௌத்தமயமாக்கப்பட்டுவரும் நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றை மறைமுகமாக ஆதரிக்கின்றார்.

தமிழ்க் கட்சிகளுக்கு அறிவுரைகூற முற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலில் தம் பக்கம் உள்ள தவறுகளைச் சரி செய்ய முயலவேண்டும். அரச திணைக்களங்கள் (குறிப்பாக தொல்லியல் திணைக்களம்), படைத்தரப்புகளின் ஆதரவுடன் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்களுக்குத் தடைபோடவேண்டும். அரசாங்கத் தரப்புக்களின் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும். இவை எதையும் செய்யாது வெறுமனே வெற்று வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு தமிழ்த் தரப்புக்களைக் குறைகூறுவது எந்தவிதத்திலும் நியாயமாகாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாது நாட்டுக்கு எந்த விமோசனமும் இல்லை என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறியாதவர் அல்லர். தான் அரசியல் செய்வதற்காக வரவில்லை, நாட்டை மீட்டெடுப்பதே தனது இலக்கு என்று கூறும் ரணில் விக்கிரமசிங்க, முதலில் செய்யவேண்டியது, நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே. அதற்கான காத்திரமான நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கவேண்டும். வெற்று வார்த்தைகளை நம்பி இனியும் தமிழர் தரப்பு ஏமாறமாட்டார்கள் என்பதை மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.



### இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில்

# வாக்குறுதிகளால் ஏமாற்றும் அரசு; கூட்டமைப்பின் முடிவு விரைவில்!

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, மே 3**

**வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கவுள்ள சில முடிவுகள் விரைவில் அரசுக்கு அறிவிக்கப்படும்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சர்வகட்சிப் பேச்சு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களுக்கான தீர்வை முன்வைப்பதில் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் மட்டுமல்லாது முற்றாக இடம்பெறவில்லை.

வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படுகிறது. நடைமுறையில் எதுவுமில்லை. இந்த விடயம் தொடர்பாக கட்சி கலந்தாலோசித்து ஆராய்ந்து வருகின்றது. நாம் எடுக்க வேண்டிய சில முடிவுகளை விரைவில் அரசுக்கு அறிவிப்போம் - என்றார். (ச-22)

## சீனாவின் முதலீடுகள் இலங்கையில் கூடும்!

*சைனா மெர்சண்ட்ஸ் தலைவர் தெரிவிப்பு*

இலங்கையில் சீனாவின் அண்மைய முதலீட்டுத் திட்டங்களின் முதலீடுகள் ஏறக்குறைய 2 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டும் என்று சீனாவின் மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுத்தாபனமான சைனா மெர்சண்ட்ஸ் (China Merchant) குழுமத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள அவர், 15 திட்டங்களுக்காக அம்பாந்தோட்டை சர்வதேசதுறைமுகத்தில், நடைபெற்ற கையெழுத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சீன மெர்சண்ட்ஸ் குழுமம், 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 1.68 பில்லியன் அமெரிக்க டொலர் மொத்த முதலீட்டை மேற்கொண்டுள்ளது. வளமான அம்பாந்தோட்டை நிலத்தில், சீனா அசாதாரண அத்தியாயத்தை எழுதும், அத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை முன்நோக்கி நகர்த்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## போலி இந்திய விசாக்கள் மக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே 3

போலியான அல்லது மோசடியில் ஈடுபடும் இணையத்தளங்கள் சிலவற்றின் மூலமாக இந்தியாவுக்கான போலி இலத்திரனியல் நுழைவிசைவுகள் (விசா) வழங்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலத்திரனியல் நுழைவிசைவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு போலி இணைய முகவரிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று விண்ணப்பதாரிகளிடம் அறிவுறுத்தப்படுகின்றது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. இவ்வாறு சுமார் 125 போலி இணையத் தளங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்றும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

| | | |
|---|---|---|
| **நாளை** | **04.05.2023** வியாழக்கிழமை சித்திரை 21 | சுபநேரம் : 07.26- 08.56<br>ராகுகாலம் : 01.26 – 02.56<br>அக்கினிநாள் ஆரம்பம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மோதல் உருவாகும் சாத்தியம்

## ஐ.நா. அதிகாரிகளை எச்சரித்த சுமந்திரன்

**யாழ்ப்பாணம், மே 3**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, தொல்பொருள் வளச்சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்றிட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்ஸலா ஆகியோருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கையில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் இருவிதமான மோதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்த எம்.ஏ.சுமந்திரன், அவற்றை உரியவாறு கையாள்வதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

முதலாவதாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அழிக்கப்படல் என்பன பற்றி ஐ.நா. அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டிய சுமந்திரன், இவை தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியப்பாடு காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து ஐ.நா. அதிகாரிகள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்டவாறான முறையற்ற செயற்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவதாக நாடளாவிய ரீதியில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் மோதல் குறித்துப் பிரஸ்தாபித்த அவர், 'அரகலய' உள்ளடங்கலாகக் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் இன்னமும் அடையப்படாமை இதற்குக் காரணமாக அமையக்கூடும் என்று சுட்டிக்காட்டினார். இருப்பினும் அதனூடாகப் பல்வேறு நன்மைகள் அடையப்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவசியமான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார். (ஒ-இ)

# காலப்போக்கில் ஐ.ம.ச. முகவரி அற்றுவிடும்!

## ஐ.தே.க. பொதுச்செயலர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3

சந்தர்ப்பவாத அரசியலை நடத்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்காலத்தில் 'முகவரியற்று' காணாமற் போய்விடும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கட்சிகள் உருவாகலாம். இலங்கை வரலாற்றில் அவை நிலைப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதேகதிதான் ஏற்படும்.

சந்தர்ப்பவாத அரசியலையே நடத்துகின்றது என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சர்வதேச நாணய நிதிய தீர்மானம் மீதான வாக்கெடுப்பை ஐக்கிய மக்கள் சக்தி தவிர்த்துள்ளது. நாட்டு நலன்கருதி செயற்பட்ட பௌசிக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது. மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கு தமது கட்சி எதிர்ப்பு தெரிவிக்கின்றது என்பதையே இதன்மூலம் வெளிப்படுத்துகிறது. சந்தர்ப்பவாத அரசியலால் நீடித்து நிலைக்க முடியாது - என்றார். (ச-44)

# தேயிலை உற்பத்தி வீழ்ச்சி; ஏற்றுமதி வருவாய் உயர்வு

கொழும்பு, மே 3

நாட்டின் தேயிலை உற்பத்தி கடந்த மூன்று மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் தேயிலை ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது என இலங்கை தேயிலைசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் 5 மில்லியன் கிலோ தேயிலை குறைந்துள்ளது.

2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 63 மில்லியன் கிலோ. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 58 மில்லியன் கிலோவாகவுள்ளது.

எனினும் தேயிலை ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் ஒருகிலோ தேயிலையின் விலை அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என இலங்கை தேயிலைசபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



வெடுக்குநாறிமலையில்

# விக்கிரகங்கள் பிரதிஷ்டை சட்டத்தரணிகள்குழு பார்வை

வவுனியா, மே 3

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்துக்கு சட்டத்தரணிகள்குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்று பார்வையிட்டுள்ளது.

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து வழிபாடு மேற்கொள்ளமுடியும் என நீதிமன்று உத்தரவிட்டது. அதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. விக்கிரகங்கள் வைப்புச் செய்யப்பட்டமை மற்றும் ஆலயத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையாகி வாதப்பிரதிவாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள்குழு வெடுக்குநாறிமலைக்குச் சென்று களநிலைமைகளை ஆராய்ந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வவுனியாவின் சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருஅருள், சட்டத்தரணிகளான திலீப் காந்தன், கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் இந்தக் குழுவில் பங்கேற்றிருந்தனர்.

இவர்களுடன் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான சீ.வீ.கே.சிவஞானம், ஜி.ரி.லிங்கநாதன், சுகிர்தன், கேசவன் சயந்தன், ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் சென்றிருந்தனர். (ச-18)

# போதைப்பொருள் வர்த்தகம் பிரதான நபரொருவர் கைது

கொழும்பு, மே 3

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் மாபியாவின் பிரதான நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெல்லே சுரங்க எனப்படும் சுரங்க பிரதீப்புக்கு நெருக்கமான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்தபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரிடமிருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# வாகன 'சைட்' கண்ணாடி பலே திருடர்கள் சிக்கினர்

கொழும்பு, மே 3

கொழும்பு நகர்புறப் பகுதிகளில் நீண்ட காலமாக வாகன பக்கக் கண்ணாடி களைத் திருடி விற்பனையில் ஈடுபட்டு வந்த இரண்டு சந்தேகநபர்கள் வெள்ளவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகன பக்கக் கண்ணாடிகள் 20 சோடி என்பன மீட்கப்பட்டன என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வாகனங்களில் பக்க கண்ணாடிகள் திருட்டுத் தொடர்பில் கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகளுக்கமைய வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் தேசாந் தலைமையிலான அணியினர் முன்னெடுத்த சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றது.




மோட்டார் சைக்கிள்களை நூதனமாகத் திருடி அவற்றின் 'சைட்' கண்ணாடிகளை உடைத்து நீண்டகாலமாக விற்பனையில் சந்தேகநபர்கள் ஈடுபட்டமை விசாரணையில் தெரியவந்தது.

சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று." -வள்ளுவர்

மங்கோலிஸ விழிப்புணர்வை ஏற்படுத்தும் அவசியம் கருதி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



மங்கோலிஸ நிலைமையின் இந்த வருடத்துக்குரிய தொனிப் பொருள் 'எங்களுடன் இருங் கள்: எங்களுக்காக அல்ல'. அதாவது மங்கோலிஸ நிலைமை உள்ளவர்களும் மற்வர்கள்போல் சரி சமனாக நடாத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ச.சஸ்ரூபி,
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


# நிறமூர்த்தப் பிறழ்வால் ஏற்படும் மங்கோலிஸ நிலை













மங்கோலிஸ நிலைமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய நாளாக வருடந்தோறும் மார்ச் மாதம் 21ஆம் திகதி பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. அவ்வகையில் இந்த வருடத்துக்குரிய தொனிப் பொருள் யாதெனில் 'எங்களு டன் இருங்கள்: எங்களுக்காக அல்ல'. அதாவது மங்கோலிஸ நிலைமை உள்ளவர்களும் மற் றவர்கள்போல் சரி சமனாக நடத்தப்படவேண்டும் என்பதை இந்தத் தொனிப்பொருள் வெளிப் படுத்துகின்றது.

### பெயரும் பின்னணியும்

பிறப்பின்போது நிறமூர்த்தப் பிறழ்வால் ஏற்படும் மங்கோ லிஸ நிலைமையானது ஜோன் லண்டன் டவுண் என்பவரால் விபரிக்கப்பட்டமையால் அவரின் பெயரால் 'டவுண் சின்ட்றோம்' என அழைக்கப்படுகின்றது. மனித உடலிலே 46 பரம்பரை அல குகள் உள்ளன. அதாவது 23 சோடி. இவையே சந்ததிக்கு சந்ததி இயல்புகளைக் கடத்துகின் றன. இது இவ்வாறிருக்கையில், 21ஆம் பரம்பரை அலகானது அசாதாரணமாக மூன்றாகப் பிரி வடைவதால் 46 பரம்பரை அலகு களுக்குப் பதிலாக 47 பரம்பரை அலகுகள் மனித உடலில் தோற் றுவிக்கப்பட்டு இவ்வகையான பிறழ்வான சேர்க்கையால் பிறக் கின்ற பிள்ளையின் உடல் மற்றும் விருத்திப்படிமுறை ரீதியினாலான அசாதாரண குணங்குறிகள் குழந்தைகளில் தோற்றுவிக்கப் படுகின்றன. இக்குழந்தையை 'மங்கோலிஸ நிலைமையுடைய குழந்தை' என்று மருத்துவப் பெய ரில் அழைக்கின்றனர். ஆகவே இந்த நிலைமை பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதற்கு வரு டந்தோறும் 3ஆம் மாதம் 21ஆம் திகதி மங்கோலிஸ நிலைமை பற் றிய விழிப்புணர்வு தினமாக பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 21ஆம் நிறமூர்த்தமானது 3ஆக பிரிவதை இது சுட்டிக்காட்டும் தின மாக அமைகின்றது.

### ஏன் இந்த நோய்நிலை?

உலக நாடுகளின் கருத்துக் கணிப்பின்படி, வருடந்தோறும் 6 ஆயிரம் பிள்ளைகள் மங் கோலிஸ நிலைமையுடன் பிறக் கின்றனர். அதாவது 700 குழந் தைகளில் ஒரு குழந்தை இந்த நிலைமையுடன் பிறக்கின்றது. கர்ப்ப காலத்தில் தாயின் இரத் தப்பரிசோதனையின்போது இந்த நிலைமையை தோற்றுவிக்கும் காரணிகள் உண்டா என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதிகூடிய தாயின் வயது (35வயதிலும் அதிகம்) முக்கியமான கார ணத்தைப் பிடிக்கின்றது. அதாவது 30 வயதிற்கு குறைந்த தாயெனில் ஆயிரத்தில் ஒருவருக் கும், 40 வயதுக்கு அதிக வயதுடைய தாயெனில் ஆயிரத்தில் 12 பேருக் கும் இந்நிலைமையுடன் குழந்தை பிறக்கும் சாத்தியம் உண்டு என ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. மேலும் மங்கோ லிஸ நிலைமையுடன் உள்ள தாய்க்கு இதே நிலைமையுடன் பிள்ளை பிறக்கும் சாத்தியம் 50 வீதமாகக் காணப்படுகின்றது.

### அறிகுறிகள்

இந்தநிலைமையுடன் பிறக்கும் பிள்ளையின் தலை சிறியதாக இருப் பதுடன் தட்டையான பின் பகுதி மண்டையோட்டில் தென்படும். முகத்தோற் றத்தில் மேல் நோக்கிய தான கண்கள், சாய்வான கண் மேல் இமைகள், கண்ணின் கருவிழிக்கு அருகில் வெண் ணிற பொட்டுக்கள், சற்று இறக் கப்பட்ட நிலையில் காதுகள், சிறியதான அல்லது அற்றுப் போன காதுச் சோனைகள், தட்டை யான பலத்துடன் கூடிய சிறிய மூக்கு, சிறியதான வாய்க்குழியில் இருந்து வெளி நோக்கிய நாக்கு, ஒழுங்கு வரிசையில் அமையாத பல் வரிசை, மேல் பல் கீழ் பல் பொருந்தாத நிலைமை என்ற வாறு அமைந்திருக்கும். அகன்ற சிறியதான கழுத்து காணப்ப டும். அத்துடன் தலைமுடிகள் ஐதாகவே காணப்படும். கைகள் சிறியதாகவும் அகன்றதாகவும் காணப்படும். தனித்தரேகையே உள்ளங்கையில் காணப்படும்.



பாதத்தின் உட்பக்க மாக நீண்டதாக ஒரு மடிப்பு காணப்படும். இந்த வகையான வெளித்தோற்றங் களோடு மட்டும் நின்று விடாது குழந்தை மருத்துவ நிபுணரின் பரிசீலனையும் முக்கியத்துவமா கிறது.

இவ்வகையான பிள்ளைகளை 'விசேட தேவையுடையோர்' என கருதி அவர்களிற்கு கவனிப்பை வழங்கவேண்டும். இவர்கள் இல குவில் உணர்ச்சி வசப்படக்கூடிய வர்களாக இருப்பர். இளமைப்பரு வத்தை அடையும் போது மனச் சோர்வு, பதகளிப்பு, ஒன்றையே திரும்பத் திரும்ப நினைத்துக் கொள்ளல், ஒன்றையே திரும்ப திரும்ப செய்தல், மற்றும் அசா தாரணமான நடத்தை மாற்றங் களை வெளிக்காட்டுவர் அல்லது உணர்ந்து கொள்வர்.

மேலும் இப்பிள்ளைகளின் விருத்திப்படிமுறைகள் மந்த கதியிலேயே நடைபெ றும். அதாவது நடத்தல், இருத்தல், கதைத்தல் போன்ற செயற்படுகளை கிரமமாகப் பழக்கிவிட வேண்டும். உதாரணமாக வலிமை குன்றிய நாக்கு தசையின் தன்மையால் அடிக்கடி நாக்கை வெளி நோக்கிய படி வைத்திருப்பர். இதனால் கதைக்கும் திறன், சாப்பிடும் திறனை விருத்தி செய்துகொள்ள சிரமப்படுவார் கள். மேலும் இவர்களுக்கு கிட்டப்பார்வை மற்றும் தூரப் பார்வை புலன் குறைபாடு ஏற்ப டும் வாய்ப்பு அதிகம் உள் ளதாலும். நேரடியான கண்தொடர்பு வைத்தி ருத்தலை தவிர்க்க முற் படுவதாலும் பேச்சுதிறன் குறைவதற்கு சாத்தியம் உள்ளது. மேலும் இவர் களில் அவதானக்குறைவு, சீரற்ற நித்திரை முறை மற்றும் மல, சலம் கழிக்கும் வழக்கம், பிந்திய புத்திக்கூர்மை விருத்தி காணப்படும்.

இவர்களது அதிகப்படியான சரா சரியான விவேகத்திறன் (IQ) 40-80 வரையில் இருக்கின் றது. அவர்கள் வளர்க்கப்படும் சூழல் காரணிகள் மற்றும் அவர் களின் பராமரிப்பில் அக்கறை கொள்ளும் மருத்துவ குழாமின் பங்களிப்பும் இவர்களின் விவே கத்திறனில் செல்வாக்குச் செலுத் துகின்றன.

இவ்வாறான பிள்ளைகளில் 50 வீதமானவர்கள் தம் 55 வயது வரையேனும் உயிர்வாழக்கூடி யவராக இருப்பர். இந்த நிலை மையில் பிறந்த பிள்ளைகளுக்கு பரம்பரை ரீதியினாலான இதய நோய்களுக்கு சாத்தியப்பாடு அதிகம் உண்டு. இதை விட கண் புரை நோய், இலகுவில் நோய் தொற்றுக்குள்ளாகுதல், சுவாச நோய், பார்வை செவிப்புலன் சார் பான பிரச்சினைகள், தைரொயிட் சுரப்பி குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளுக்கும் வாய்ப்புக் கள் அதிகம்.

மங்கோலிஸ நிலைமையுடன் உள்ள பிள்ளைகளுக்கு சிகிச் சையும் உளவள துணையும் அவசியமாகத் தேவைப்படுகின் றது. இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்த மருத்துவ குழாமில் உள்ள ஒவ்வொரு சிகிச்சையாளரும் தத்தமது பங்க ளிப்பை தெரிந்தெடுத்து குழுவாக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். தொடர்ச்சி முறையில் கிளினிக் சென்று உடல் மற்றும் உள நிலைமையை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இவர்களிற்கு மருத்துவர், தாதி, இயன் மருத்துவ சிகிச்சையாளர், பேச்சு மற்றும் மொழித்திறன் சிகிச்சையாளர், தொழில் முறை சிகிச்சையாளர், விஷேட கல்வியூட்டும் ஆசிரியர், உளவளதுணையாளர், சமூக சேவைப்பணியாளர்கள், பெற் றோர்கள், குடும்ப உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலதரப் பட்டவர்களின் சேவைகள் மற்றும் கவனிப்பு முக்கியமாகிறது.

மங்கோலிஸ நிலைமையுடைய குழந்தைகள் இலகுவில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாக இருப்பார்கள். இளமைப்பருவத்தை அடையும்போது மனச்சோர்வு, பதகளிப்பு, ஒன்றையே திரும்ப திரும்ப நினைத்துக்கொள்ளல், ஒன்றையே திரும்ப திரும்ப செய்தல், மற்றும் அசாதாரணமான நடத்தை மாற்றங்களை வெளிக்காட்டுவார்கள் அல்லது உணர்ந்து கொள்வார்கள். மேலும் இந்தப்பிள்ளைகளின் விருத்திப்படிமுறைகள் மந்த கதி யிலேயே நடைபெறும். அதாவது நடத்தல், இருத்தல், கதைத்தல் போன்ற செயற்படுகளை கிரமமாகப் பழக்கிவிட வேண்டும். உதாரணமாக வலிமை குன்றிய நாக்கு தசையின் தன்மையால் அடிக்கடி நாக்கை வெளிநோக்கிய படி வைத்திருப்பர். இதனால் கதைக்கும் திறன், சாப்பிடும் திறனை விருத்தி செய்துகொள்ள சிரமப்படுவார்கள். இவர்களுக்கு கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை புலன் குறைபாடு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளதாலும். நேரடியான கண்தொடர்பு வைத்திருத்தலை தவிர்க்க முற்படுவதாலும் பேச்சு திறன் குறைவதற்கு சாத்தியம் உள்ளது. மேலும் இவர்களில் அவதானக்குறைவு, சீரற்ற நித்திரை முறை மற்றும் மல, சலம் கழிக்கும் வழக்கம், பிந்திய புத்திக்கூர்மை விருத்தி காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவங்கள் அரங்கை உருவாக்குகின்றன

## நாடகக் கலைஞர் சடாட்சரம் மார்க்கண்டுவின் அனுபவப் பகிர்வு

மார்க்கண்டு சாவகச்சேரி பெரிய மாவடியை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு நாடகக் கலைஞராவார். இவர் தமிழில் முதுகலைமாணி பட்டப்படிப்பினை மேற்கொண்ட பட்டதாரியாகவும் காணப்படுவதுடன், சிறு வயதிலிருந்து நாடகத் துறையில் ஏற்பட்ட ஈடுபாட்டின் மூலமாக தம்மை நாடகத் துறைக்கு அறிமுகம் செய்தார். அந்த வகையில் இவர் சிறந்த நடிகராகவும், நாடக ஆசிரியராகவும், நெறியாளராகவும், நாடகப் போட்டிகளில் நடுவராகவும் தம்மை நாடகத் துறையில் ஈடுபடுத்தினார். அதுமட்டுமல்லாது நாடக அரங்கக் கல்லூரியில் பெற்ற பயிற்சிகளின் ஊடாகவும் நாடகங்களை நடித்துத் தம்மை பலப்படுத்திக் கொண்டார். இவர் எவ்வாறு நாடகத்துறையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார் என்பதனை நோக்கும் பொழுது சிறு வயதில் இருந்தே பல நாடகங்களை பார்த்ததன் ஊடாக நாடகத்தின் மீதான ஒரு நாட்டம் இவருக்கு ஏற்பட்டதை அறிய முடிகின்றது.

இவருக்கு நாடக மன்றங்களில் நாடகங்கள் பார்த்த அனுபவங்கள் உண்டு. அதற்கு பிற்பட்ட காலங்களில் காத்தவராயன் கூத்து பல இடங்களில் விடியவிடிய நிகழ்த்தப்பட்டது. அதில் வரும் பாடல், ராகம், தாளம் என்பவற்றினை கேட்பதில் மிகவும் ஆர்வமாக இருந்துள்ளார். இதனைத் தொடர்ந்து சாவகச்சேரியில் உள்ள கச்சாய் அம்மன் கோயில் பங்குனித்திங்களின்போது, அங்கு ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் கோயிலுக்கு வடக்குப் பக்கத்தில் இருக்கும் வயல்வெளியில் மேடை அமைத்து வெவ்வேறு இசை நாடகமும் நிகழ்த்தப்படும். இதில் பவளக்கொடி, பூதத்தம்பி, அரிச்சந்திர மயானகாண்டம் போன்ற இசை நாடகங்கள் வைரமுத்துவால் 1970களில் மேடையேற்றப்பட்டன. இவற்றைப் பார்த்ததன் மூலமும் இவருக்கு நாடகத்தின் மீதான விருப்பம் அதிகளவாக ஏற்படத்தொடங்கியது.

பாலச்சந்திரனின் சிறந்த கற்பனை நாடகமான 'அண்ணறைய்ட்' என்ற நாடகத்தில் ட்ரைவர் மற்றும் கண்டக்டர் என இரண்டு பாத்திரங்கள் காணப்பட்டன. இதில் நகைச்சுவைப்பாங்கு அதிகளவாகக் காணப்படும். இது ஊமைத் தன்மையிலானதும் உரையாடற்பாங்கிலான நாடகமாகவும் காணப்படுகிறது. அதாவது பஸ்ஸில் ஸ்டேரிங் பிடிப்பவர் போல் கதிரையில் இருந்து பாவனை செய்தல். பின்னால் நிற்கும் கண்டக்டர் பஸ்ஸில் பிரயாணிகள் ஏறுவதுபோல கற்பனை செய்து கதைப்பார். இவ்வாறான முறையில் இந்த நாடகமும் புதிய அனுபவத்தைத் தந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து பாடசாலையில் க.பொ.த உயர்தர கல்வியினை கற்றுக் கொண்டிருக்கும்போது, கொழும்புத்துறையில் இருந்து து.சோமசுந்தரம் என்பவர் திருமணம் முடித்து இவருடைய ஊருக்கு வந்தார். அவர் மிகச்சிறந்த நாடகக்காரராக காணப்பட்டார். அவருடைய வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் இரத்தக்கண்ணீர் போன்ற மிக அற்புதமான நாடகங்களைப் பார்த்த அனுபவமும் இவருக்கு உண்டு.

இதனைத் தொடர்ந்து 1978இல் பேராசிரியர் சி.மௌனகுரு பல்கலைக்கழக மாணவர்களை கொண்டு, இசை மற்றும் கூத்து இராகங்களையும் இணைத்து உருவாக்கிய 'புதியதொரு வீடு' நாடகம் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகமும் புதிய அனுபவத்தினைக் கொடுத்ததாக குறிப்பிடுகிறார். அத்துடன் 'தாசீசியஸால் பொறுத்தது போதும்' எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இது அகில இலங்கை நாடகப் போட்டிக்கு சென்று தேசிய அளவிலே மூன்று விருதுகளைப் பெற்றுக் கொண்டது. இது கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை வைத்துக்கொண்டு ஆக்கப்பட்ட நாடகமாகக் காணப்பட்டதுடன் ஊமத்தினுடனான நடிப்பு முறையும் இதில் காணப்பட்டது.

'பொறுத்தது போதும்' நாடகத்தில் தன்னை ஈர்த்த விடயமாக சம்மாட்டி பாத்திரத்தை குறிப்பிட்டார். இப்பாத்திரத்தை பிரான்சிஸ் ஜெனம் ஏற்று நடித்தார். இதில் எல்லாத் தொழிலாளர்களது துயரமும் 'சம்மாட்டி' என்ற பாத்திரத்தினூடாக குறியீட்டு முறையில் வெளிக்கொண்டுவரப்பட்டது. அத்தோடு மேடையின் பின்பகுதியில் (சைக்குளோறாமா) நீல ஒளியேற்றி முன்பகுதி இருட்டாக வைத்து அதில் நிழல் விழுமாறு காட்சி மேற்கொள்ளப்பட்டது. அது தம்மை கவர்ந்திருந்ததுடன் புதிய நுட்பமுறையாகவும் காணப்பட்டது எனக் கூறினார். இவ்வாறான பல சிறந்த நாடகங்களை பார்த்ததன் ஊடாக நாடகத்தின் மீதான ஆர்வம் இவருக்கு அதிகரித்துக் கொண்டு சென்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து 1977ஆம் ஆண்டு 'பாலூட்டி வளர்த்த கிளி' என்னும் நாடகத்தில் குறுகியநேரப் பெண்வேடம் ஏற்று நடித்துள்ளார். 1978ஆம் ஆண்டு சித்தி விநாயகர் கலை மன்றம் என்ற மன்றத்தை உண்டாக்கி தம்மைப் போன்ற இளைஞர்களை ஒன்றிணைத்து வீரபாண்டிய கட்டப்பொம்மன் என்ற நாடகத்தை சோமசுந்தரத்தின் நெறியாள்கையில் எல்லோரும் சேர்ந்து நடித்தனர். அதில் இவர் 'ஜாக்சன் துரை' என்ற வெள்ளைக்காரன் பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும்போது சிறு சிரமம் ஏற்பட்டதாகக் கூறினார். ஏனெனில் வெளிநாட்டவரைப் போல கதைப்பது உச்சரிப்பது போன்றன கடினமாக இருந்ததென்றார்.

நடிகர் எம்.ஆர்.ராதா நடித்த 'இரத்தக்கண்ணீர்' என்ற நாடகம் முதலில் நாடகமாக நடிக்கப்பட்டு பின் திரைப்படமாக்கப்பட்டது. அந்த நாடகத்தை இவர்களும் இங்கு நாடகமாக ஆற்றுகை செய்தனர். இதில் பாலு என்ற பாத்திரத்தை இவர் ஏற்று நடித்துள்ளார். இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் ஜெயரத்தினம் மார்க்கண்டினையும் அவரது நண்பர்களையும் அழைத்து அண்ணா நாடக மன்றத்தை உருவாக்கி அதன் மூலம் சில நாடகங்களை மேடையேற்றினர். இதில் கற்பனைச்சரித்திர நாடகமான அன்புக்கரசி நாடகத்தை மேடையேற்றினர். இந்த நாடகங்கள் வரலாற்று நாடகம் போல இருக்கும் ஆனால் நடந்த வரலாறாக இருக்காது. இவ்வாறு கற்பனையாக ஒரு வரலாற்று நாடகத்தை எழுதி அதில் நடிக்கும் தன்மையும் இவர்களிடம் காணப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

1978ஆம் ஆண்டில் புதிய நாடக வருகையை பார்ப்பதற்கு இவருக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. இதில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் வருடாவருடம் நாடகப் போட்டிகளை வைத்து சிறந்த நாடகங்களைத் தெரிவு செய்தனர். கலையார்வம் உள்ளவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றினர். மார்க்கண்டு தங்களுடைய நாடகமான அன்புக்கரசி நாடகத்தை மேடையேற்றினார். இந்த நாடகத்தில் இளவரசனின் தங்கையான அன்புக்கரசியை மாரப்பன் எனும் தளபதி திருமணம் செய்து அரசை கைப்பற்றுவதற்கு சூழ்ச்சி செய்து கொண்டான். அச்சூழ்ச்சியை எதிர்த்து மணிமாறன் எனும் வீரன் பாத்திரம் அரசை காப்பாற்றி அன்புக்கரசியை காதலித்து மாரப்பனின் சதியை வீழ்த்துதல் எனும் கதையை கொண்டதாக காணப்பட்டது. இதில் பத்து நாடகங்களில் ஒன்றாக இந்த நாடகமும் தெரிவு செய்யப்பட்டது. போட்டியின்போது ஆற்றுகை செய்யப்பட்ட 'கீழ்வானம் சிவக்கிறது' என்ற நாடகத்தினை இவர் பார்த்ததனூடாக அதில் வெளிப்படுத்தப்பட்ட ஊமப்பாங்கிலான நடிப்பு முறையின்பால் ஈர்க்கப்பட்டார்.

1980 களில் இவர் நாடக அரங்க கல்லூரிக்குச் சென்றபோது முதலில் நடித்த நாடகம் மௌனகுருவின் சங்காரம். அதில் தொழிலாளர்களில் ஒருவராகவும் ஆதிவாசிகளில் ஒருவராகவும் நடித்திருந்தார். இதனைத் தொடர்ந்து மௌனகுரு நெறிப்படுத்திய குருசேத்திர [illegible] என்ற நாடகத்திலும் நடித்த அனுபவம் இவருக்கு உண்டு. கவிஞர் செவ்வந்தி

40ஆம் அணி
நாடகமும் அரங்க கலைகளும் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மகாலிங்கத்தின் வன்னியர் திலகம் என்னும் வரலாற்று நாடகத்தில் வெள்ளைக்காரன் வெல் பாத்திரம் ஏற்றும், உறவின் முடிவு என்னும் சமூக நாடகத்திலும் நடித்துள்ளார். இவ்வாறு நாடகங்களை பார்த்ததன் ஊடாகவும் பல விதமான நாடகங்களில் பாத்திரம் ஏற்று நடித்தும் புதிய புதிய நடிப்பு நுட்பங்களைக் கற்றுக் கொண்டுள்ளார்.

1980களில் நாடகங்களை பழக்குவதற்கும் அதனை நெறியாள்கை செய்வதற்கும் தன்னை நாடகத் துறையில் ஈடுபடுத்திக் கொள்கின்றார். அதன் வழியாக 'ஏன் இந்த மாற்றம்?' என்ற நாடகத்தை 1981ஆம் ஆண்டு முதன் முதலில் எழுதி அதில் இசை நாடகம் மற்றும் கூத்து மெட்டுக்களை இணைத்து நாடகத்தினை நெறியாள்கை செய்துள்ளார். இதில் இவருக்கு ஜெயரட்ணமும் உதவியதாகவும் குறிப்பிட்டிருந்தார். இக் காலத்தில் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம் நடாத்திய வடமாகாண நாடகப் போட்டியில் 50க்கும் மேற்பட்ட நாடகங்கள் பங்குபற்றியதாகவும் அதில் இவருடைய நாடகத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

1986ஆம் ஆண்டில் கு.ம.சண்முகலிங்கம் அவர்களுடைய குளத்து மீன்கள், முல்லைமணியின் பண்டாரவன்னியன் போன்ற நாடக எழுத்துருக்களை நெறிப்படுத்தி சித்திவிநாயகர் கலையரங்கத்தில் மேடையேற்றியதாகக் குறிப்பிடுகின்றார். 1992ஆம் ஆண்டு கோடாரிக்காம்பு எனும் இதிகாச நவீன நாடகத்தினை எழுதி நெறியாள்கைசெய்து நடித்தும் உள்ளார்.

இந்தியாவில் ஆறு வருடம் இவர் இருந்தபொழுது பேரறிஞர்களுடனான தொடர்பு, மேடைப் பேச்சாளர்களின் அறிமுகம் என்பன இவருக்கு ஏற்பட்டன. அங்கு இலக்கிய மீளாய்வுகளில் கலந்து கொள்வதற்குரிய வாய்ப்புகளும் கிடைத்தன. தமிழ்நாட்டில் இருந்த போது மார்கழி மாதத்தில் இடம்பெற்ற இசைவிழாவில் இசைக்கச்சேரிகள் இடம்பெறுவதுடன் நாட்டிய நாடகங்கள், நாடகங்கள் போன்ற கலை நிகழ்வுகளை பார்க்கும் சந்தர்ப்பங்களும் அதிகளவாக இவருக்கு கிடைத்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து திரும்பிய இவர் மீண்டும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இணைந்து 2017ஆம் ஆண்டு பணி ஓய்வுபெறும் வரையும் பாடசாலை மட்டத்திலான பல நாடகங்களையும், கலைநிகழ்வுகளையும் எழுதிப் பழக்கி மேடையேற்றினார். இவரது தற்போதைய நாடகப் பணி பற்றி நோக்கும்பொழுது, நாடகம் போடும் மன்றம் தற்போதும் இயங்குகின்ற நிலையிலும் அதில் நாடகம் நடிப்பதற்கான நடிகர்கள் இல்லை. இம்மன்றம் ஆரம்பித்த தினத்தன்று ஒவ்வொரு வருடமும் வெளியிடங்களில் இருந்து நாடகம் வரவழைத்து மேடையேற்றுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் நாடகம் போடும் ஆர்வத்தினாலும் எமது மரபைப் பாதுகாப்பதற்காகவும் விடியவிடிய ஆடும் காத்தவராயன் கூத்தை 2019இல் இரண்டரைமணி நேரமாக சுருக்கி மேடையேற்றியுள்ளார். அண்மையில் 2023 ஜனவரி 2ஆம் திகதி அன்றும் நீர்வேலியில் உள்ள வாசிகசாலையில் அந்தக் கூத்தினை ஒரு மணித்தியாலமாக குறைத்து மேடையேற்றியதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக இவரது நாடகத்தினுடனான வாழ்க்கைப் பயணம் தொடர்வதை அறியக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி (ஊடக சுதந்திர தினத்துக்கு முதல்நாள்) உதயன் அலுவலகத்துக்குள் நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட பணியாளர்களான பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ், இராஜரட்ணம் ரஞ்சித்குமார் ஆகியோருக்கான அஞ்சலி நிகழ்வுகள் உதயன் பணிமனையில் நேற்று உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (ம)


## துணுக்காய்ப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் வரையறுக்கப்பட்டது.

## கெண்டனர் பெட்டிகள் மூன்றினை விற்பனை செய்வதற்கான பகிரங்க கூறுவிலை கோரல்

- துணுக்காய்ப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான மூன்று கெண்டனர் பெட்டிகள் மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.
- இக் கூறுவிலைகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் ரூபா 100/= செலுத்தி பெற்று விண்ணப்பிக்க முடியும்.
- மேற்கூறிய கெண்டனர் பெட்டிகளை 02.05.2023 - 16.05.2023 வரை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5.30 மணிவரை சங்கத்தின் மல்லாவி எரிபொருள் நிலைய வளாகத்தில் பார்வையிடமுடியும்.
- விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பங்கள் 16.05.2023ம் திகதி பி.ப 3.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- இம் முடிய கூறுவிலை 23.05.2023ஆம் திகதி பி.ப 2 மணிக்கு திறக்கப்படும்.
- இக் கெண்டனர் பெட்டிகள் விற்பனை தொடர்பில் சங்கத்தின் இயக்குனர்சபை தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ சங்கம்,
துணுக்காய்.

(CR 39772) A-1





## சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான புனரமைப்பு வேலையின் கூலி வேலைக்கான கூறுவிலை கோரல்

சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான புனரமைப்பு வேலையின் கேள்வியானது (கூறுவிலையானது) தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்படுகின்றது. இதற்குரிய கேள்வி ஆவணங்களை 05.05.2023 தொடக்கம் 20.05.2023 வரை ஆலய காரியாலயத்தில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை ரூபா 200 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாவணங்கள் 20.05.2023 அன்று பிற்பகல் 5.30 மணிக்கு திறக்கப்படும். இதற்கு தாங்களோ அல்லது தங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிநிதி ஒருவரோ அனுமதிக்கப்படுவார். இதற்குரிய முன் கேள்விக் கூட்டம் 13.05.2023 பிற்பகல் 2 மணிக்கு ஆலய காரியாலயத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**ஆலய திருப்பணிச்சபை,**
**ஐயனார் கோவிலடி,**
**சுன்னாகம்.**

**077 144 7616,**
**077 608 8734**

(CS/24756)AH-1



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 15 . 11 . 1940
இறப்பு 05 . 04 . 2023

## அமரர் திருமதி சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி

பாசமுடன் அரவணைத்தே பக்குவமாய் எமை வளர்த்தீர்!
உற்றார், உறவினரை உவப்புடனே ஆதரித்தீர்!
இவ்வுலகை விட்டேகி விண்ணுலகை அடைந்திடினும்
வற்றாது உம் நினைவு நாம் வையகத்தில் வாழும்வரை.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.05.2023) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மதியபோசன நிகழ்வு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் கோவில் மண்டபத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
சிந்துஜன் ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS/50280)AH-1

**குடும்பத்தினர்.**



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம்
### நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி
### 2022/2023 (அணி - VI)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள் வார இறுதி நாட்கள்
- கற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி -
  விண்ணப்பதாரி கீழ்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றினைக்கொண்டிருத்தல் வேண்டும்.
  - ✓ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப்பெற்றிருத்தல் வேண்டும்.
  - ✓ தேசியத் தொழில்தகைமை மட்டம் - 4 இனை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
  - ✓ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையாலும், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பீட சபையாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தகுதிகள் அல்லது அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான முதலீடு - ரூபா 60, 000/-

**கட்டண விபரம் :**

| | |
|---|---|
| அனுமதிப்பத்திரக்கட்டணம் | - 1,000.00 |
| பதிவுக்கட்டணம்/ புதுப்பித்தல் கட்டணம் | - 2,000.00 |
| கல்விக் கட்டணம் | - 51,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - 1,000.00 |
| மொத்தம் | - 60,000.00 |

- விண்ணப்ப முடிவுதிகதி - 30.05.2023
- விண்ணப்பிக்கும் முறை :
  முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் இணையத்தளத்தில் (http://www.maco.jfn.ac.lk/) பதிவேற்றம் செய்யப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பத்தினூடாக விண்ணப்பம் செய்யலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு : **021 222 3610**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CR.39103) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நயப்புரை

கவிஞர் அழ. பகீரதன்



# 106 ஆண்டுகள் வாழ்ந்த மூதாட்டி

40 வயதுக்கு மேல் ஒருவர் வாழ்வது என்பது கேள்விக்குறியாக இருக்கும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்ற இந்தக்காலத்தில் 100 வயது கண்டவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியமூட்டும்விதமாகவே இருக்கின்றது.

அண்மையில் தொல்புரம் கிராமத்தில் 106 வயதுவரை மூதாட்டி ஒருவர் வாழ்ந்து காலமாகியிருக்கின்றார். 1917ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி பிறந்த சரஸ்வதியே அந்தப் பேறு பெற்ற மூதாட்டி.

இவர் மாரிமுத்து இலட்சுமி இணையருக்கு மகளாகத் தொல்புரம் கிழக்கில் பிறந்தார். துணைவர் வேலுப்பிள்ளை செல்லத்துரை. மூன்று பெண்பிள்ளைகளையும் இரண்டு ஆண்பிள்ளையையும் பெற்றெடுத்தவர். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்றுத் தேறியவர்.

மாடு என்றால் செல்வம் என்று பொருள். ஆவுடையர்கள் பெரிய செல்வந்தர்களாக இருந்தனர். அந்த வகையில் பசுமாடு வளர்த்து பால் கறந்து சீவிப்பதே இவரது நாளாந்த சீவியம். தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்குப் பால் காய்ச்சிக் கொடுப்பதில் திருப்தி இவருக்கு. துரையன் வளவு பிள்ளைகளுக்கும் பால் காய்ச்சி கொடுத்த பண்பாளர். அந்திம சங்கம் போன்ற அமைப்புகளுடன் இணைந்து சமூக நோக்கோடு சீட்டுப் பிடிப்பவர்.

பனம்பொருள் சார்ந்த குடிசைச் சிறுகைத்தொழிலைத் தொழிலாகக் கொண்டவர். சிறுவயதிலிருந்து நடைப் பயிற்சி மிக்கவர். எந்தத் தூரத்திற்கும் நடைப்பயணமாகவே போய் வருபவர். மருத்துவமனைப் பக்கமே எட்டியும் பாராதவர். வீட்டு வைத்தியமே இவரது வைத்தியம். உணவே மருந்து.

அம்மியில் அரைச்சு சமைச்ச உணவுகளையே உட்கொண்டு வாழ்ந்துவந்தார். புழுங்கல் குத்தரிசிச் சோறும் ஒடியல் கூழும் பனங்கிழங்கும் தவிர வேறு இக்கால உடன் உணவுகளை உட்கொள்ளாமல் வாழ்ந்தால் நீண்டகாலம் வாழலாம் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" எனும் குறளுக்கு ஒப்ப பெருமை யுறு பெண்ணாக வாழ்ந்தவர். ஊரில் எல்லோரது வீடுகளுக்கும் சென்றுவந்து எல்லோரது சுக துக்கங்களில் பங்கெடுத்தவர். இவரைத் தெரியாதவர் யாருமில்லை எனலாம்.

"எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

என்ற குறளுக்கமைய திடமான மனத்தோடு இயற்கையோடு ஒட்டிய வாழ்வு எனும் தான் கொண்ட கொள்கையில் உறுதியோடு வாழ்ந்தபடியால் எண்ணியபடி எண்ணியாங்கு நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்துள்ளார்

சாணகம் மெழுகிய திண்ணைகளில் படுத்துறங்குபவர்களுக்குச் சாவு அண்டாது. வாழ்வது என்பது இயற்கையோடு ஒட்டியதாகவே இருக்கவேண்டும். இயற்கையைப் பேணுவதும் குழந்தைகளைப் பேணுவதும் பெண்ணின் இயல்பாகவும் பண்பாகவும் அமைந்தவை. அவ்வாறு போற்றுதற்குரிய வாழ்வை வாழ்ந்து 106 அகவையில் 28.03.2023இல் இறையடி சேர்ந்த செல்லத்துரை சரஸ்வதிக்குப் புகழ் அஞ்சலி செலுத்துவதனூடாக அவரது அந்தப் பண்பை நாமும் பெற்று நலம் பெறுவோமாக.

# வலிகளின் பதிவுகளான ஓவியக் கண்காட்சி



ஓவியம் என்பது உணர்வுகளின் வெளிப்பாடு. படைப்பாளி தான் கண்டவற்றை, உணர்ந்தவற்றை, சமூகத்துக்குச் சொல்லவேண்டிய செய்தியை தூரிகைகள் மூலம் படைப்பாக்கம் செய்து ஓவியங்களாக வெளிப்படுத்துகின்றார்.

கலை வடிவங்களில் ஓவியங்கள் முதன்மையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. வேட்டைக்காலத்தில் மனிதன் தனது உணர்வினை வெளிப்படுத்துவதற்கும், பயத்தினை போக்குவதற்கும், வேட்டை விலங்கில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும், தமது உணர்ச்சியை செம்மைப்படுத்திக் கொள்வதற்கும் ஓவியங்களை வடிகாலாகக் கொண்டிருந்தான்.

சமகால ஓவியப்படைப்பாளிகள் தாம் சார்ந்த சமூகத்தின் அவலத்தினையும், நடந்தேறிய விடயங்களையும், ஓவியப் படைப்புக்களாக்கி வருகின்றனர்.

இப்பகைப்புலத்தில் பெண் வாத செயற்பாட்டாளரான கமலா வாசுகியின் ஓவியக் கண்காட்சி மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வில் பேராசிரியர் சி.ஜெயசங்கர், ஓவியர் சு.நிர்மலவாசன், எழுத்தாளர் விஜயலட்சுமி சேகர், விரிவுரையாளர் து.கௌரீஸ்வரன், கலாநிதி அ.விமல்ராஜ் போன்ற பலரும் கலந்து கொண்டனர்.

கமலா வாசுகி 1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரி ஆவார். 1989ஆம் ஆண்டு பெப்ரவரியில் யாழ்.பல்கலைக்கழகத்தில் தனது முதலாவது ஓவியக் கண்காட்சியை நடத்தியுள்ளதுடன் இலங்கை தமிழ் சூழலில் குறிப்பிடத்தக்க பெண்நிலை வாத ஓவியராக தன்னை வெளிப்படுத்திவருகின்றார். இலங்கையிலும், வெளிநாட்டிலும் தனியாகவும், பல ஓவியர்களுடனும் இணைந்து தனது ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ள இவர் 1995ஆம் ஆண்டு முதல் மட்டு நகரை தளமாகக் கொண்டு இயங்கிவருவதுடன், 1998ஆம் ஆண்டு மட்டுநகர் சாள்ஸ் மண்டபத்தில் தன்னுடைய ஓவியக்கண்காட்சியை நடத்தியுள்ளார்.





பெண்ணிலை வாதச்சிந்தனைகளையும் அதற்குரிய வாழ்க்கை முறைகளையும் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினருடனும் பகிர்ந்தும் பரவலாக்கியும் கொள்வதற்கான ஊடகமாக கலை இலக்கியங்களை [illegible] கடந்த மூன்று தசாப்தங்களை தான் அனுபவித்த, எதிர்கொண்ட விடயங்களைப் பேசுபொருளாகக் கொண்டு தனது இந்த ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ளார்.

கடந்த மூன்று தசாப்த கால வரலாற்றில் ஆணாதிக்கச் சிந்தனைகளின் ஆதிக்கமும் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களும் எமது பண்பாட்டை எவ்வாறு தீர்மானித்து வந்துள்ளது என்பதை பெண்ணிலை வாதிகளின் பார்வையில் அவர்களின் எதிர்வினைகளை மையப்படுத்தி இந்த ஓவியங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆணாதிக்க சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டுள்ள பண்பாட்டு வெளிகளில் நிராகரிக்க முடியாத கேள்விகளுடன் பெண்ணிலை வாதச்சிந்தனைகள் உலகம் தழுவி முக்கியத்துவம் பெற்று வருகின்ற இக்கால கட்டத்தில் இவரது ஓவியங்களும் நிராகரிக்க முடியாத கலைப்படைப்புக்களாக முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கைச் சூழலில் பொருளாதாரத்தடைகள் காரணமாக ஓவியங்களைப் படைப்பதற்கான ஊடகங்கள் கிடைக்காத போது எவ்வாறு ஓவியர்கள் செயற்பட்டார்கள் என்பதையும் எவ்வாறு தாக்க வன்மை கொண்ட ஓவியங்களை படைப்பாக்கம் செய்துள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்வதற்கான வாயிலாக இவரது ஓவியக்கண்காட்சி அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அலுவலர்களுக்கு கைவிசேடம் வழங்கலும் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வும் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. (ய-66)



புதுவருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-66)



கொடிகாமம் - போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு வாழ்க்கைத்திறன் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (ய-159)

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பு 'கல்விக்கு கைகொடுப்போம்' என்னும் தொனிப்பொருளில் முல்லைத்தீவு - துணுக்காய், பாண்டியன்குளம், வன்னிவிளாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 362 பாடசாலை மாணவர்களுக்கு கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை காலணிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ய-246)





மன்னார் மாவட்டச் செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் இப்தார் நிகழ்வு மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமேல் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (ய-213)


# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 07 . 1931



மறைவு
02 . 05 . 2023

## சின்னையா பொன்னம்பலம்

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பொன்னம்பலம் அவர்கள் நேற்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், திரவியத்தின் பாசமிகு கணவரும், வசந்தாதேவி, காந்தராசா, சரோயினிதேவி, தயாளினிதேவி, ஸ்ரீமுருகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், செல்லையா, தங்கம்மா, இராசதுரை மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம், கணேசபவன் மற்றும் கருணாகரன், சிவந்தினி, சாந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜப்பிரியன், லக்சிபன், வரலக்ஸ்மி, பவிசன், ருஸ்சிகா, கேனுர்ஜா, அபிராம், நிதுராம், ஸ்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 6841 343
077 257 5269

(CS 247684-1)





புதுவருடப்பிறப்பு தினத்தை முன்னிட்டு சுடர்ஒளி பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ய-159)

கருகம்பனைப் பொது அமைப்புக்கள் இணைந்து நடத்திய சித்திரை விளையாட்டு விழா கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் சோ.சத்தியசீலன் தலைமையில் கருகம்பனை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ய-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதச் சுதந்திரத்துக்கு இலங்கையில் தடை!



## அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3
இலங்கையில் மதச் சுதந்திரம் தடைப்பட்டுள்ளது என்று சர்வதேச மத சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
2023 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையை வெளியிட்டுள்ள இந்த சுயாதீன ஆணைக்குழு, இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை கவனம் செலுத்தவேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கைக்கு மேலதிகமாக ஆப்கானிஸ்தான், இந்தியா, சீனா, நைஜீரியா மற்றும் நிகரகுவா ஆகிய நாடுகளிலும் மதச் சுதந்திரம் தடைப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் மதச் சுதந்திரம் மீறப்பட்டுள்ளது என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
சில மதத்தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தை மதச் சுதந்திர கறுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு நான்காவது ஆண்டாக பரிந்துரைத்துள்ளது. (எ-இ)

# குடு அஞ்சுவுக்கு காதலி சட்ட உதவி

கொழும்பு, மே 3
பிரான்ஸில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ள போதைப் பொருள் கடத்தல்காரரான அஞ்சுவை நாடு கடத்துவதைத் தடுக்க சட்டக் குழுவின் உதவியை அவரது காதலி எனக் கூறப்படும் பிரான்ஸ் நாட்டு யுவதி நாடியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது எனப் புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
குடு அஞ்சு நாளை 4ஆம் திகதி பிரான்ஸ் நீதிமன்றில் முற்படுத்தப்படும்போது அவர் சார்பாக இந்தச் சட்டத்தரணி குழு முன்னிலையாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
பிரான்ஸ் நாட்டு யுவதி ஒருவருடன் சில காலமாக தொடர்பு வைத்திருந்தார் என்று கூறப்படும் குடு அஞ்சு, இலங்கையை சேர்ந்த திருமணமான தனது மனைவியை விவாகரத்துக் கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# கசிப்பு மீட்பு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 3
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி பகுதியில் கசிப்புடன் ஒருவரை நெல்லியடி பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய நெல்லியடிப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.
சந்தேகநபரிடம் இருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

# நாடு திரும்ப மறந்த மருத்துவ நிபுணர்கள்

கொழும்பு, மே 3
பயிற்சி பெறுவதற்காக வெளிநாடு சென்ற 67 விசேட மருத்துவ நிபுணர்கள், நாட்டுக்குத் திரும்பவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் இந்த மருத்துவ நிபுணர்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பயிற்சிக்காக வெளிநாடு சென்ற சுமார் 400 மருத்துவர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)


# முக்கிய அறிவித்தல்

**அடகு நகை விற்பனை அறிவித்தல்**
**ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி**

01.09.2021 ஆம் திகதி தொடக்கம் 02.05.2022 ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை 05.06.2023 ஆம் திகதிக்கிடையில் மீட்டுக் கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும், தவறின் 05.06.2023 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**இல. 31C ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)**
**021 221 7287, 076 636 1238**

(CS 50279)(K-1)



# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## கேள்வி கோரல் - சபை நிதி

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு சங்கானை மரக்கறிச் சந்தையும் கடைத் தொகுதியும் மற்றும் மீன் சந்தை ஆகியவற்றுக்கு CCTV பொருத்துதல் சம்பந்தமாக தனித்தனியாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | : | 2023.05.04 – 2023.05.17 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | : | 2023.05.18 பி.ப 14.30 மணி வரை |
| கேள்வி ஆவணம் திறக்கப்படும் திகதி | : | 2023.05.18 பி.ப 14.30 மணி |

02. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
04. தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் விலைக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணமாக கீழ்க் குறித்த ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக ரூபா 3,000.00 (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக) இனைப் பணமாக செலுத்துவதன் பேரில் கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தி இரு பிரதிகளில் தயாரித்து "செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் சங்கானை மரக்கறிச் சந்தையும் கடைத் தொகுதியும் எனின் "**Procurement for Supply and Installation of IP Based CCTV Surveillance System to Chankanai Vegetable Market and Shopping Complex - Bid No. NP/14/41/VWPS/G/01/2023**" எனவும் சங்கானை மீன் சந்தையாயின் "**Procurement for Supply and Installation of IP Based CCTV Surveillance System to Chankanai Fish Market - Bid No. NP/14/41/VWPS/G/02/2023**" எனவும் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் தனித்தனியாக அனுப்புதல் வேண்டும். (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் அவசியமாகும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்டு அல்லது பிந்திக் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
06. விலைக் கேள்வியானது கேள்வி ஆவணம் சமர்ப்பிக்கப்படும் நேரம் முடிவடைந்ததும் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.
08. இக் கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல் அல்லது சேர்த்தல் அல்லது கிடைக்கப் பெற்ற கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 11.05.2023 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொ. இல | பெறுகை விபரம் | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடியாகும் காலம். |
| 1 | **Procurement for Supply and Installation of IP Based CCTV Surveillance System to Chankanai Vegetable Market and Shopping Complex** | NP/14/41/VWPS/G/01/2023 | 45 நாட்கள் | 30,000.00 | 03.08.2023 |
| 2 | **Procurement for Supply and Installation of IP Based CCTV Surveillance System to Chankanai Fish Market** | NP/14/41/VWPS/G/02/2023 | 45 நாட்கள் | 15,000.00 | 03.08.2023 |

தலைவர்,
பிரதேச சபை பெறுகைக்குழு
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

03.05.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
## பதவி வெற்றிடம்

**பதவி: பொதுமுகாமையாளர் (வெற்றிடம் 01)**
**குறியீட்டு இல: 101/08**
**சம்பளத்திட்டம்: 20665 - 260 x 10 - 280 x 10 - 26065**
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபம் 02/2022 இற்கு அமைவானது)

**அங்கிகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமை இத்தகைமையானது கணக்கியல் / வியாபார புள்ளி விபரவியல் / வியாபார கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். **அல்லது** இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவன மொன்றில் முகாமை நிலை பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது க.பொ.த உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவன மொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலை பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

**முடிவு திகதி : 31.05.2023**

**ஏனைய விபரங்கள்**

01. வயதெல்லை 18-45 (சங்கப்பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது)
02. இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் சுற்று நிருபத்திற்கமைய இதர படிகளும் காலத்துக்குக்காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
03. குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
05. தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு தங்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும் அத்துடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் உரிய பதவியைக் குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல.330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ **31.05.2023** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்**

(CS/50287) AH-1

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 09 . 1942

இறப்பு 17 . 04 . 2019



## தியாகராசா கனகசபாபதி

(இ.போ.ச. ஓய்வுபெற்ற லிகிதர்)

ஆண்டுகள் நான்கு போய்விட்டது அப்பா !
கண்முன்னே வாழ்ந்தகாலம்
முடிவாகி போனாலும்
எம் உள்ளே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகளுடன்............

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**130, எவ்லேன், உடுவில்.**

**குடும்பத்தினர்**

(cs 24757) (N.1)

# பொலிஸ் வேலைக்கு உலை வைத்த நடனம்

கொழும்பு, மே 3

இசை நிகழ்ச்சி ஒன்றில் மேடையில் சீருடையில் நடனமாடினார் என்று கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பணி இடைநிறுத்தம் செய்யப் பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரே பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி களனி பியகமவிலுள்ள விளையாட்டரங்கொன்றில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போதே இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மேடையில் ஏறி பாடகர் ஒருவரின் பாடலுக்கு நடனமாடினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## வேலையாள்கள் தேவை

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் இயங்கி வரும் வீட்டுப்பாவனைப் பொருள் உற்பத்தி நிறுவனத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.
மதிய உணவு வழங்கப்படும்

**077 557 7750**

## விற்பனையாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பிடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **076 641 4999**

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

### Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna- 2023/2024

01. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **19th May 2023**
02. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.
03. Expected project cost per annum

| | |
|---|---|
| Total expected cost (annual) | 45.6Million |
| Jaffna premises | 24 Million |
| Ariviyalnagar premises | 21.6 Million |

04. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
    - 4.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
    - 4.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**.
    - 4.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department / Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**
    - 1.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be atleast 30.
05. Interested bidders may obtain further information from Assistant Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours. Contact numbers: - Tele: 021 2226517, Fax:- 021 2226517.
06. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **15th May 2023** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of **Rs. 5000.00**. The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number** <u>970000060000276</u> at any Branch of People's Bank in Island wide.
07. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 10th May 2023 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
08. Bids shall be delivered or sent by registered post to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 19th May 2023 or** be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend
09. Bids shall be valid for a period of 91 Days (should be as at 18th August 2023) from the date fixed for closing of bids or any extended period.
10. All bids shall be accompanied by a bid security for and which shall be;
    - In the form included with the Bidding document
    - In favour of Vice-Chancellor, University of Jaffna
    - For an amount of Rs. 50,000.00 Valid up to 15th September 2023 (120 days from the date of closing of bid)
    - Issued by one of the agencies
        - a. A bank operating in Sri Lanka;
        - b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna.**

29.04.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேருந்து, வான், முச்சக்கரவண்டி மற்றும் சிறியவகை காவுவண்டி. (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) - 2023 - 2024**

தவிசாளர். கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள். அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-16 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 | யாழ்/ -கிளிநொச்சி |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg | 02 | 02 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.5 | முச்சக்கரவண்டி / Three wheeler | 03 | 01 | கிளிநொச்சி |

விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை மே மாதம் பதினைந்து (15) ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

3. வாகன முற்பதிவானது 2012ம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர். மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால். மேற்பார்வை செய்யப்படும்.

5. பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

6. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது

- பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ப்பட்டு இருத்தல் வேண்டும்.
- குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
- வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாயினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van (12 - 16 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.2 | பிரயாணிகள் பேருந்து /Passenger Van (08 - 10 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus ( 45 - 10 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg (02 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.5 | முச்சக்கரவண்டி / Three wheeler (03 இருக்கைகள்) | ரூ 100.000.00 |

- குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள், மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கிய தாக இருத்தல்வேண்டும் அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள். மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக் கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15.000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 12.09.2023 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசிய மானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3.000. 00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில். மக்கள் வங்கி 970000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

10. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும். விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும். மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original). பிரதி (Duplicate) என்று தனித்தனி யாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2023 - 2024" எனத் தலைப்பிட்டு தவிசாளர். கேள்விச் சபை. த.பெ.இ- 57. திருநெல்வேலி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15.05.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

❖ **ஏலத் திறப்பு (Bid Opening)**

01. திகதி:- 15.05.2023
02. நேரம்:- 02:00 pm
03, இடம்:- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
04. ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில் நுட்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்
05. ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்

**மேலதிக தகவல்களுக்கு: உதவிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை -**
**Tele: 021 2226517, Fax:- 021 2226517.**

**தலைவர், கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**

Fax No: 021 222 6517.Email:administration@univ.jfn.ac.lk.com. University of Jaffna P.O. Box 57, Thirunelvely, Jaffna

(CR/39768)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருக்கள் தேவை

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் ஆலயத்திற்கு நிரந்தரமாக தங்கி பூசை செய்வதற்கு குருக்கள் தேவை. விரும்பியவர்கள் 05/05/2023 வெள்ளிக்கிழமை ஆலய நிர்வாகத்தினரிடம் மாலை 3.00 - 5.30 ஆலய முன்றலில் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**075 033 8630** **ஆலய நிர்வாகத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 01 . 1931



இறப்பு
30 . 04 . 2023

### விசுவன் கதிரவேலு

நாவற்குழி தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட விசுவன் கதிரவேலு கடந்த (30.04. 2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று. முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24760) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில்
04 . 01 . 1948



விண்ணில்
01 . 05 . 2023

### லோறன்ஸ் ரட்ணம் புளோரன்ஸ் லில்லி (பேபி)

பெரியவிளானை சேர்ந்த லோறன்ஸ் ரட்ணம் புளோரன்ஸ் லில்லி (பேபி) நேற்றுமுன்தினம் (01-05-2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு ராசரட்ணம் இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும். காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை சுவானுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும். லோறன்ஸ் ரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும். டுஷானின் அன்புத் தாயாரும். காலஞ்சென்றவர்களான மேரி தெரேசா. ஹெலன். ஜூலியன் மற்றும் பியற்றிஸ்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். டல்சின் ஜெனிசியாவின் அன்பு மாமியாரும். டுஷிக்கா. லூட்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-05-2023) புதன்கிழமை காலை 09:00 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**லொஹென்ஹிரின்,**
**பெரிய விளான்,**
**இளவாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
லோறன்ஸ் ரட்ணம் - கணவர் - 077 122 6007
டுஷான் - மகன் - 077 716 2538
டல்சின் ஜெனிசியா - மருமகள் - 077 721 4316

## தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், மே 3

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று, முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. தொடர்ந்து நாளை 11 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ம)

## சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 3

வல்லை முனியப்பர் வீதியில், தூக்கிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 38 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், தவறான முடிவெடுத்து அவர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழ்....

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் மலேரியா நோயின் உள்ளூர்த் தொற்று இறுதியாக 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் இதுவரை உள்ளூர்ப் பரம்பல் காரணமாக எந்தவொரு நோயாளியும் இனங்காணப்படவில்லை. ஆனாலும் மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று இலங்கைக்குத் திரும்பி வந்தவர்களில் பலருக்கு மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது. இந்தவருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களில் 15 பேர் மலேரியா நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்திலும் மேற்கு ஆபிரிக்க நாடொன்றுக்குச் சென்று திரும்பிய உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தவருடம் ஏப்ரல் மாதத்தில் எமது நாட்டில் 14 வருடங்களுக்குப் பின்னர் மலேரியா நோயால் ஒரு இறப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பேருவளை பிரதேசத்தில் இருந்து இரத்தினக்கல் வியாபார நோக்கத்துக்காக ஆபிரிக்கா சென்று திரும்பிய ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

எமது நாட்டில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் உலர்வலயப் பிரதேசங்களில் இன்னமும் காணப்படுகின்றன. இந்நிலையில் மலேரியாப் பரம்பல் உள்ள நாடொன்றுக்குச் சென்று அங்கு நோய் தொற்றுக்குள்ளாகி வருபவர்கள் மூலம் உள்ளூரில் மலேரியாப் பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது. வெளிநாடொன்றில் மலேரியாத் தொற்றுக்குள்ளாகும் ஒருவருக்கு ஒரு வருட காலம் வரை எந்த வித நோய் அறிகுறிகளும் இல்லாது காணப்படலாம். ஆனால், அவர் மூலம் ஏனையவர்களுக்கு இந்நோய் பரவும் வாய்ப்புள்ளது. எனவே மலேரியாப் பரம்பல் உள்ள நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் மலேரியாத் தடுப்பு மருந்துகளைப் பாவிக்கவேண்டும்.

தற்போது தென்னாபிரிக்கா, உகண்டா, சூடான், ருவாண்டா, மொசாம்பிக், மடகஸ்கார், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, கானா, லைபீரியா, தன்சானியா, சிம்பாவே, பப்புவா நியூகினியா, சீரோலியான், சவூதி அரேபியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் மலேரியாவின் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது.

மலேரியாப் பரம்பல் உள்ள நாடுகளுக்குச் செல்வதற்கு முன்னர் மலேரியாத் தடுப்பு மருந்தைப் பாவிக்கத் தொடங்குவதன் மூலம் மலேரியாத் தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம். இந்தத்தடுப்பு மருந்துகளைத் தங்களுக்கு அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் அல்லது யாழ்ப்பாணம் பண்ணை சுகாதாரக் கிராமத்திலுள்ள மலேரியாத் தடை இயக்கப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். மலேரியாப் பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்த பின்னர் மலேரியா குருதிப் பரிசோதனையை கிரமமாகச் செய்வதன் மூலம் மலேரியாத் தொற்று உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் - என்றுள்ளது. (அ-ம-26)

## மோசடிக்கார...

(ஏஜென்ஸியை) கடத்திவந்து வீடொன்றில் அடைத்துவைத்துச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 3 பெண்கள் உள்ளிட்ட 11 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஹைஏஸ் வாகனம் ஒன்றும் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா, பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவர் வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து வேலணையைச் சேர்ந்த நபர்களிடம் 10 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். எனினும் அவர் எவரையும் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. அவருக்குப் பணம் கொடுத்தமைக்கு எந்தவித ஆதாரமும் இல்லாததால் ஆதாரத்தை உருவாக்குவதற்காகக் குறித்த நபரை பணம் கொடுத்தவர்கள் கடத்தி வந்துள்ளனர்.

கொக்குவில், தாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீட்டில் அடைத்து வைத்து மிரட்டி 10 இலட்சம் தரவேண்டும் என்ற கடிதம் ஒன்றை அவரிடம் எழுதி வாங்கியுள்ளது அந்தக் கும்பல். நபர் ஒருவர் கடத்திவரப்பட்டு சித்திரவதை இடம்பெறுவதாக யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் யரூரின் கட்டளைக்கு இணங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சம்பவம் இடம்பெற்றபோதிலும் ஹயஸ் வாகனம் ஒன்றில் மன்னார் செல்ல முற்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த வாகனம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் கடமையில் நின்ற போக்குவரத்துப் பொலிஸின் உதவியுடன் வழிமறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. தாங்கள் உறவினர் வீட்டுக்கு வந்ததாகவும் எவரையும் கடத்தி வரவில்லை என்றும் வாகனத்தில் இருந்தவர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் வாகனத்தைக் கொண்டு சென்று கொக்குவில், தாவடிப் பகுதியில் உள்ள வீட்டை பொலிஸ் அதிரடிப் படையினரின் உதவியுடன் சுற்றி வளைத்தனர்.

அந்த வீட்டில் கடத்தப்பட்டவர் அடிகாயங்களுடன் காணப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய 20, 29 மற்றும் 40 வயதுடைய பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 'ஹைஏஸ்' வாகனம் ஒன்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-ம-26)

## 34 நாள்களேயான...

யேறியதையடுத்து குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவசர அவசரமாகக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அங்கு குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று தெரிவித்துள்ளனர். இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அதை அறிவதற்காக குழந்தையின் சடலத்திலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம)

## விபத்தில்...

விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சத்தியநாதன் சத்தியானந் (வயது - 32) என்பவரே உயிரிழந்தவராவார்.



வடமராட்சி, அல்வாய் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் கொடிகாமத்திலிருந்து வடமராட்சி நோக்கிச் சென்ற வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த நபர் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அண்மையில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-159,26)

## வாய்க்காலில்...

இருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. பாலசிங்கம் கிருஸ்னேஸ்வரன் தவம் (வயது - 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.



வாய்க்காலுக்குள் சடலமொன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியதையடுத்து முன்னெடுக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகளின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்தநபர் வாய்க்காலுக்குள் தவறி வீழ்ந்ததால் உயிரிழப்புச் சம்பவித்திருக்கலாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-113)

## எரிவாயுவின்...

இதன்படி, 12.5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவால் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் விகிதாசாரங்களின் அடிப்படையில் ஏனைய சிலிண்டர்களின் விலைகளும் குறைக்கப்படவுள்ளன. கடந்த முறை 12.5 கிலோகிராம் எடையுள்ள லிட்ரோ எரிவாயுவின் விலை ஆயிரத்து 5 ரூபாவால் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தையிட்டியில்...

தமிழ்த் தேசிய பேரவையின் ஏற்பாட்டில், தையிட்டி, கலைவாணி வீதி முகப்புப் பகுதியில் இன்று பிற்பகல் 3 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரை ஒரு சட்டவிரோதக் கட்டடம் என்றும் அதன் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கோரிக்கைகள் எவையும் செவிமெடுக்கப்படவில்லை. திஸ்ஸ விகாரைக்குரிய கட்டுமானப்பணிகள் தொடர்ந்தன. அண்மையில் திஸ்ஸ விகாரைக்கு 100 அடித் தூபியொன்றும் அமைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பௌத்த ஆக்கிரமிப்பை நிறுத்தும் விதமாகவே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அனைவரின் ஆதரவின்றி கையகப்படுத்திய காணிகளை மீளப்பெறுதல் என்பது சாத்தியமற்றது. ஆகவே இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் தம் ஆதரவைத் தரவேண்டும் என்று தமிழ்த் தேசிய பேரவை தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ-ம-125,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னபடி ரணில் நடந்து காட்டட்டும்!

## மனோ எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, மே 3**

**இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால், இந்தக் கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகின்றீர்கள். பெப்ரவரி நான்காம் திகதியளவில் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள். இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகின்றீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால், இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள். 'வோக் யுவர் டோக் மிஸ்டர் பிரசிடென்ட்!'" (சொன்னபடி நடந்து காட்டுங்கள்!).**

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மே தின உரை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்த தாவது:

இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மைக் கட்சிகளின் தலைவர்கள் மத்தியில், தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரைப் பற்றிச் சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்தக் கால அட்டவணைக்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும். சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமத்துருக்கள் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய்விட்டது.

இன்று 'அரகல' போராட்டத்துக்குப் பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வு பற்றி, தமிழ்க் கட்சிகளை அழைத்துப்பேசமுன் சிங்களக் கட்சிகளை அழைத்துநாட்டின் உண்மை நிலைமை பற்றிப் பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடியாகக் கூறவேண்டும். இனிமேலும் இதைத் தள்ளிப் போடமுடியாது என எடுத்துக் கூற வேண்டும். சர்வதேச சமூகமும் அதற்குச் சாதகமாக நடந்துகொள்ளும் என நான் அறிகின்றேன்.

தற்போது நிலைமையைப் பாருங்கள். "இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு, கிழக்கில் காணி பறிபோகின்றது. தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகிவிட்டது. சிவனைத் தூக்கிக் கடாசி விட்டு, ஆமத்துருக்கள், இராணுவத் துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கின்றார்கள். காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக்களை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இதுதான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதற்ற நிலைமை வடக்கு - கிழக்கில் விரைவில் உருவாகும். மலைநாட்டில், வந்தவன், போனவன் எல்லாம் அடாத்தாகத் தோட்டக் காணிகளைப் பிடிக்கிறான். ஆனால், 200 வருட வரலாற்றைத் தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர் செய்ய காணி இல்லை. மலையகத் தமிழருக்காக நான் குரல் கொடுத்தால், என்னைத் "தேயிலைக் கொழுந்து பறிக்க வந்தவன்" என்கின்றார்கள். "தோட்டக் காட்டான்" என்கின்றார்கள். இது மலைநாட்டுத் பெருந்தோட்டப் பகுதிகளில் கடும் பதற்ற நிலைமையை மெதுவாக உருவாக்கி வருகின்றது - என்றார். (எ-22)


**ஒத்துமாறல் [ஆசிரியர்]**

மேல் மாகாணத்துக்கு ஒத்துமாற விரும்பும் ஆசிரியர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 394 2765**

(cs 50280) A/N-1

**வேலைக்கு ஆட்கள் தேவை**

ஊரெழு - பூரண நிலையத்தின் (ஆன்மீக நிலையம்) வெளியீட்டுப் பிரிவில் சஞ்சிகை, நூல் வடிவமைப்பு, கணினி மூலமான தட்டச்சு உட்பட பதிப்புத்துறை சார்ந்த விடயங்களில் பணிபுரிவதற்கு ஆர்வமும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு: 076 7100 000**

**இணைப்பாளர் - பூரணநிலையம்**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

**பார்வையிடும் நேரம் :**

**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

**தொடர்பு:-076 755 8606 077 638 5683**

**பணிப்பெண் தேவை**

ஊர்காவற்துறையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 50286)

**077 440 7103, 076 922 0723**

**வேலையாட்கள் தேவை**

- கணிய அளவையியலாளர் (QS) பயிலுனர்.
- தொழில்நுட்பவியலாளர் (TO) பயிலுனர்.

**தொடர்புகளுக்கு:**

(8.30 A.M- 6.00 P.M வரை)

077 724 5399

royalbuilders1983@gmail.com

**வேலையாட்கள் தேவை**

- மேசன் :- 2500
- சட்டரிங் தெரிந்தவர்கள் :- 2500
- மேசன் உதவியாளர் :- 2000
- பெயின்ரர் :- 2000 - 2500

**தொடர்புகளுக்கு:**

( 8.30 A.M - 6.00 P.M வரை )

**077 724 5399**

**Efly Jaffna Pvt LTD**

**Vacant Wanted**

Air Line Ticketing Exprience

1) Ticketing Basic Experience

2) English Skills

3) Spoken English AS Well

**Contact No. Watsapp**

**004179 1060 606**

**E-mail Address-info@efly.ch**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **கைதடி A-9 பிரதான வீதியுடன்** 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

(CS 24650)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.